28th March 1958]

THE HON. SRI C. SUBRAMANIAM: This question was taken up when we were giving aid to the institution. When the suggestion was made to them, they preferred not to get the grant or aid from us and preserved their principle with reference to the admissions to the College. Therefore, I am afraid friendly advice may not have any effect at all.

Madras Public Health Act, 1939

* 450 *Q.*—SRI M. K. SOMASUNDARAM (on behalf of Sri M. S. Selvarajan): Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether the State Town-Planning Officer has made any suggestions to amend the rules framed under the Madras Public Health Act, 1939, in the interest of cottage industries; and

(*b*) if so, the action taken thereon?

THE HON. SRI M. A. MANICKAVELU: (*a*) & (*b*) Yes, Sir. The question of amending section 92 of the Madras Public Health Act, 1939, is under consideration.

SRI M. K. SOMASUNDARAM: வருகிற ஆண்டில் இதை திருத்தி அமைக்க அமுலுக்குக் கொண்டுவருவதற்கு உத்தரவு போடப்படுமா?

THE HON. SRI M. A. MANICKAVELU: இதை அமுலுக்கு கொண்டுவரவேண்டுமென்றால் இந்த ஆக்டில் சில ஷரத்துக்கள் திருத்தப்படவேண்டியிருக்கிறது. அதை திருத்தி மசோதா கொண்டு வருவதற்கு இப்போது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

SRI T. SAMPATH: ஸர், இந்த சட்டம் பழமையான சட்டம், இந்த சட்டம் வந்து 19 ஆண்டுகள் ஆகிறது. இதிலுள்ள பல ஷரத்துகளை மாற்றவேண்டியிருப்பதால் இதை உடனடியாக மாற்றவேண்டும் என்பதை அமைச்சர் அவர்கள் உணருவார்களா? சீக்கிரமாக இந்த சட்டம் திருத்தப்படுமா?

MR. SPEAKER: இதை திருத்தப்படும் என்று மந்திரி அவர்கள் சொன்னார்களே? ஆகையால் இந்த கேள்விக்கு அவசியம் இல்லை என்று நினைக்கிறேன்.

SRI A. P. C. VEERABAHU: இந்தமாதிரி டௌன் பிளானிங் திட்டங்களை கொண்டுவரும்போது அதன் மூலமாக கிராமக் கைத்தொழில்களுக்கு இடைஞ்சல் ஏற்படுகிறது என்பதை மந்திரி அவர்கள் அறிவார்களா?

THE HON. SRI M. A. MANICKAVELU: கிராம தொழில் அபிவிருத்திக்கு சில இடைஞ்சல்கள் ஏற்படும் என்று கருதித்தான் இதை மாற்ற வேண்டும் என்று கருதி, இதற்காக திருத்த மசோதா ஒன்று தயாராகிக் கொண்டிருக்கிறது.

SRI A. A. RASHEED: Is the Hon. Minister aware of the fact that under the Public Health Act one-third of a street has been declared as residential area and the other two-thirds as non-residential area in Madras City?

MR. SPEAKER: How does that arise out of the main question?

SRI A. A. RASHEED: The question refers to the Public Health Act.

[28th March 1958

MR. SPEAKER : I have no objection if the Hon. Minister is prepared to answer that question. But I do not think it arises from the main question.

THE HON. SRI M. A. MANICKAVELU : I bow to the ruling of the Hon. Speaker. (Laughter.)

Village chavadies

* 451 *Q*.—SRI S. LAZAR (on behalf of Sri V. Arunachala Thevar) : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) how many public buildings (village chavadies) are there in the Pudukkottai division in all the three taluks; and

(*b*) how many of them are in a dilapidated condition?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) 82.

(*b*) 14.

SRI S. LAZAR : இந்த பாழடைந்த சாவடிகளைத் திரும்ப அமைக்க சர்க்கார் நடவடிக்கை எடுத்திருக்கிறார்களா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : மிகவும் பாழடைந்த சில சாவடிகளை ரிப்பேர் செய்ய நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படும். சில சாவடிகள் ரொம்ப மோசமான நிலைமையில் இருப்பதால், அவைகள் புதியதாகக் கட்டப்படும்.

[*Note*.—**An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.**]

II. CALLING ATTENTION TO A MATTER OF URGENT PUBLIC IMPORTANCE UNDER RULE 40 OF THE MADRAS ASSEMBLY RULES *RE* THE DEATH OF ONE ARUMUGHAM IN POLICE CUSTODY AT KODAMBAKKAM.

MR. SPEAKER : The hon. Member Sri K. Vinayakam has given notice of a motion under Rule 40, to call the attention of the Hon. Minister for Home to a matter of urgent public importance, namely, the serious situation arising out of the death of Arumugham in the Police Station at Kodambakkam. I think the matter is under enquiry. So, I would request the hon. Member to be careful in what he wishes to say. I request him to be discreet.

9-30 a.m. SRI K VINAYAKAM : சட்ட மன்றத் தலைவர் அவர்களே, இந்த விஷயம் இப்போது விசாரணையில் இருக்கிறது என்பது எனக்கு நன்கு தெரியும். அந்த விசாரணையை பாதிக்கும் அளவுக்கு நான் எதுவும் சொல்லமாட்டேன். அதேமாதிரி அமைச்சர் அவர்களும் இந்த விசாரணையை பாதிக்கும் அளவிற்கு எதுவும் சொல்வார் என்று எதிர் பார்க்கவில்லை. இந்த சம்பவம் நடந்த தொகுதியைச் சேர்ந்தவன் நான். அந்தத் தொகுதியில் ஏற்பட்ட மரணம் ஏற்பட்டது ஒரு பெரும் அதிர்ச்சியை உண்டாக்கியிருக்கிறது என்பதை நான் எடுத்துச் சொல்ல வேண்டியதில்லை. பத்திரிகைகளில் இதைப்பற்றி அதிகமாக வருவது இன்னும் பரபரப்பக் காரணம். இது ஒரு பெரிய அதிர்ச்சியை—பரபரப்பை—உண்டாக்கியிருக்கிறது. இந்த வாலிபன் செய்த குற்றம் என்னவென்று சொல்லப்படுகிறதென்றால்—பத்திரிகைகளிலிருந்து பார்க்கிறோம்—ஏதோ ஒன்றிரண்டு சாமான்களைத் திருடினான் என்று சொல்லி, அவன் போலீஸ் ஸ்டேஷனுக்குக் கொண்டு போகப்பட்டு இறந்து போயிருக்கிறான். அவன் இறந்ததற்குக் காரணம் தெரியாது. ஒரு சிலர் போலீஸார் அடித்துக் கொன்றுவிட்டார்கள் என்று சொல்லுகிறார்கள். போலீஸ்